**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன

.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, வைத்தியசாலைச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின்காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டநிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்றஅத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகஉள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன்ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடையவிடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானதுஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறுமாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிரதொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல்என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையைமேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியானநிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகபேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாகஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமானஉறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்டகணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்.நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினைமேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின்இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள்தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள்இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டுபயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாககருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைதிட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடியஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமானகணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்குஅடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினைவிட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறானகூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றேவிட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல்மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும்பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாகஅபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால்மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையைமதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டுமுகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு

அமையதொடர்ந்து செயற்படுவதற்கு வைத்தியசாலைச் சபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லதுநிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகாணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகாணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினைமாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாககாணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்குஅடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினைஇடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும்உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில்நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றைபரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் வைத்தியசாலைச் சபையின் பணிகளைதொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன்ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும்ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதாஎனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும்ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது வைத்தியசாலைச் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேடஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான காலஎல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்ககொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக

### 1..5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் சொத்தொன்றிற்காக மேற்கொண்ட | இந்த மொடியுலரை இஸ்தாபிப்பதனூடாக சொத்தின் பெறுமதி அதிகரிப்பதாக கடிதக் | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | செலவில் சொத்தின் பெறுமதி அதிகரிக்குமாயின் அதனை சொத்தின் பெறுமதிக்கு சேர்க்க வேண்டிய போதும் Vitre Ctomy இயந்திரத்திற்காக இடப்பட்ட புதிய மொடியுலர் மற்றும் மருந்தகம், காயங்களிற்காக மருந்திடும் அலகு என்டோஸ்கொபி அலகு, ஆயத்த அறைகளில் மின்சார தொகுதி திருத்தங்களிற்காக செலவிட்ட ரூபா 8,833,700 மற்றும் ரூபா 2,605,631 வை மூலதனமாக்காது செலவாக ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழித்திருந்த காரணத்தால் ஆண்டின் வருமானம் மற்றும் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | கோவைகளில் காட்டப்படாததுடன் இது சொத்தின் தற்போது காணப்படும் ஒரு பகுதியின் மீள்மாற்றலொன்றாகும் (replacement) என காட்டப்பட்டுள்ளது. அதனால் இச்செலவு மீண்டெழும் செலவொன்றாகக் கருதி கணக்கீடு செய்ததாக மற்றும் மின்சார தொகுதியின் திருத்தம் மேற்கொண்டதால் மீண்டெழும் செலவொன்றாகக் கருதி நடவடிக்கை எடுத்ததாக. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம்,நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 203,269,478 ஆன சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு வழு இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் திருத்தப்பட்டு தேறிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அறுவை சிகிச்சை பண்டங்கள் மற்றும் பொது பண்டங்களிற்காக இதுவரை எவ்வித ஆலோசனை அல்லது அதனை மேற்கொள்ளும் நிறுவனத்தினயேனும் பெயரை குறிப்பிட்டு அவை இல்லையென மற்றும் காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக திருத்த நடவடிக்கை மேற்கொண்டு 2023 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து பயன்படுத்திய திகதி முதல் பெறுமானத் தேய்விட வேண்டிய போதும், அதற்கு இணங்காத வகையில் சொத்தை பயன்படுத்திய திகதியை கவனத்திற் கொள்ளாது முழு ஆண்டிற்கும் பெறுமானத் தேய்விட கணக்கீட்டு கொள்கை தயாரிக்கப்பட்டிருந்தது. | உங்களது ஆலோசனை மற்றும் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 2023 ஆண்டு முதல் கொள்வனவு செய்த திகதி முதல் பெறுமானத் தேய்விடுவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கடப்பாடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் வைத்திசாலைக்கு | குறித்த தரப்பினரிற்கு செலுத்த வேண்டி ஏற்படுமா என்பது நிச்சிமற்றதால் நிதிப் பெறுமதி கணக்குகளில் உட்படுத்தியில்லை என மற்றும் இது தொடர்பாக | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 02 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில வெளிப்படுத்தி இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களில் எதிர்காலத்தில் காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு 2022 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 9,500,000 ஆன மூலதன மானியத்தை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் மூலதன செயலாற்றுகை கூற்றில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | இது நிதிக்கூற்றுக்ளை சமர்பிக்கும் புதிய படிவத்தின் தேவையொன்றாவதுடன் 2023 ஆண்டிற்கு அந்த புதிய படிவத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்ளை சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு.**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாடு சென்ற வைத்தியர் ஒருவரின் சம்பளமற்ற விடுமுறை நிறைவடைந்திருக்கையில் கடமைக்கு அறிக்கையிடாத காரணத்தால் 2019 மார்ச் 08 திகதி முதல் கடமையை விட்டுச் சென்றவராக கருதி நடவடிககை எடுக்கப்பட்டிருந்தது. இந் அலுவலரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 652,627 ஆன பிணைமுறி பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்காததுடன் இந்த அறிக்கை திகதி வரையும் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வைத்தியரிற்கு பல கடிதங்கள் மூலம் இக் கொடுப்பனவை செலுத்துமாறு அறிவூட்டியுள்ளதாக மற்றும் வைத்தியசாலையினால் செலுத்த வேண்டிய பணிக் கொடை போன்று B அட்டையும் வைத்தியசாலையில் இருப்பதுடன் அவரிற்கான EPF/ETF படிவத்தையும் விடுவிக்கவில்லை என. | அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாகய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | ஒவ்வொரு நிதி ஆண்டு இறுதியிலும் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக பண்டக கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதும் நிதிக்கூற்றுக்களில் | 2022 ஆண்டிற்காக அறுவை பண்டக கணிப்பீட்டை 2023 ஜுலை மாதம் 01 ஆம் திகதி முதல் 03 ஆம் திகதி வரை மேற்கொள்வதாக. | இலங்கை சனநாகய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களிற்கு இண்ஙக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளடங்கிய ரூபா 55,155,153 ஆன பெறுமதியுள்ள மருத்துவ உபகரணங்கள் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் கணிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | | |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளத்தை குறிப்பிடும் இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அலுவலர்கள் அலுவலகத்திற்கு வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கையை பேணிக் கொள்ள வேண்டிய போதும், வைத்தியசாலையில் வருகை மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்த விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்ததி இருக்க வில்லை. | இது தொடர்பாக வைத்தியசாலை முகாமைமத்துவக் குழுவில் கலந்துரையாடி உரியவாறு குறித்த நடவடிக்கை மேற்கொள்ள தேவையான முயற்ச்சிகள் எடுப்பதாக. | பொது நிர்வாக சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,175,722 ஆன பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகைரூபா 7,397,213 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,572,935 ஆன விழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இம் வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் ஏனைய செலவுகள் ரூபா 26,526,790 யினால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 மே 01 ஆம் திகதி கணக்காளராக நியமனம் பெற்ற பெண் அலுவலரின் சேவை நியாயமின்றி மற்றும் நீதியின்றியதாக முடிவுறுத்தல் தொடர்பாக வைத்தியசாலைக்கு எதிராக நீர்கொழும்பு தொழில் தீர்ப்பாயம் சபையின் 2019 ஜுலை 30 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட 21/32/2019 இலக்க வழக்கு தொடர்பாக ஏற்பட்ட | இணக்கப்பாடடிற்குள்ளான மை தொடர்பாக முன்னால் கணக்காளரினால் மேற்கொண்ட கோரிக்கையை விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை பணிப்பாளர் சபை கவனத்திற் கொண்ட | • எதிர்காலத்தில இவ்வாறான குறைகள் ஏற்படாதிருக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இணக்கப்பாடு பிரகாரம் அவ்அலுவலர் தற்போது வேறொரு தொழிலில் ஈடுபடுவதனால் கோரி விழகியதாக ஏற்றுக்கொண்டு கோரி விழகலை வழங்கவும் ரூபா 500,000 ஆன நஷ்டஈட்டு தொகையொன்றைசெலுத்தவும் வைத்தியசாலைக்கு நேரிட்டிருந்தது.அதன் பிரகாரம் வைத்தியசாலைக்கு நஷ்டஈடு மற்றும் வழக்கரிஞர் கட்டணமாக கூட்டுத் தொகை ரூபா 690,000 தொகையான விளைவற்ற செலவொன்றை மேற்கொள்ள எற்பட்டிருந்தது. | பின்னர் இந்த வழகை தொடர்ந்து முன்கொண்டு செல்வது அர்த்தமற்ற செலவொன்றாக தீர்மானித்ததால் இந்த அலுவலரின் கோரிக்கையை கவனத்திற் கொண்டு இந்த வழக்கு சமாதானப்படுத்தப்பட்டது | • நிறுவனத்திற்கு ஏற்பட்ட ரூபா 690,000 நட்டத்தை அதற்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிட மிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருந்தக களஞ்சியத்தை பழைய குடும்ப சுகாதார கிளினிக்கிற்கு கொண்டு செல்லவதற்கான ரூபா 1,116,250 ஆன திருத்த செலவினம் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 வழிகாட்டி பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 2.14 வழிகாட்டி பிரகாரம் அந்த அந்த நிதி எல்லைக்குரிய அதிகார அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது, அளவுத்திட்டம் மற்றும் அளவைகளை இனங்காணாது மற்றும் பெறுகைகள் நடைமுறையை பின்பற்றாது இச்செயலை ரூபா 100,000 இலும் குறைந்த பெறுமதியின் கீழ் வேளை பத்திரத்தை பகுதியாக்கி ஒரு வழங்குனரிற்கு ஒப்பந்தத்தை வழங்க வைத்தியசாலை பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வைத்திசாலை முகாமைத்துவம் தற்போதே கவனம் செலுத்தியுள்ளதுடன் இவ்வாறான செயல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள முறைமை ஒன்றை தற்போது தயாரித்துள்ளதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.5 (ஆ) பந்தி பிரகாரம், நிமித்த செயலிற்காக நியமிக்கப்பட்ட பிரதேச பெறுகைகள் குழுவிற்காக விடயம் தொடர்பான அறிவுள்ள நிபுணர் ஒருவரின் மற்றும் குறித்த பெறுகை தொடர்பான அறிவுள்ள அலுவலர் ஒருவருடன் கூடியதானதென திணைக்கள தலைவர் திருப்தி அடைந்தால் அன்றி தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிக்க வேண்டிய போதும் அதற்கு இணங்காத | எதிர்காலத்தில் இவ்வாறான ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்து ஒப்பந்த வேலைகளை மேற்கொள்வதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வகையில்தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிக்காது முதன்மை பராமரிப்பு பிரிவுஅலகின் மின்சார தொகுதியின் திருத்தம் மற்றும் பொதுக் களஞ்சிய முன்பாக நில தயாரிப்பிற்கான ரூபா 3,395,012 திருத்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | முதன்மை பராமரிப்பு பிரிவு அலகின் மின்சார தொகுதி திருத்தத்திற்குரிய தொழிநுட்ப உத்தியோகத்தரின் (மின்சாரம்) 2022 மார்ச் 23 திகதிய மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 1,791,595 (வெட் இன்றி) ஆன போதும் இறுதி பட்டியல் பெறுமதி ரூபா 2,605,631 ஆனது. இவ் வித்தியாசத்திற்காக போதியளவான நியாயப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட்டு இருக்காததுடன் தொழிநுட்ப அறிக்கை தொடர்பாக அமைச்சின் மின்சார பொறியியலாளர் ஒருவரின் பரிநிதுரை ஒன்றை பெற்றுக் கொள்ளாது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.3 பிரிவின் பிரகாரம் பணவீக்கம் அல்லது ஏனை விடயங்களை கவனத்திற் கொண்டு மொத்த கிரய மதிப்பீட்டை நாளாதுவரையாக்கி குறித்த அதிகாரத்தினால் அங்கீகரித்த பின்னர் விலைமணு கோர நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>அவ்வாறே திருத்திற்காக விலைமணுக் கோர பெறுகைகள் குழுவின் அங்கீகாரமின்றி வைத்தியசாலை பணிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய 2022 மே 12 திகதி கடிதமொன்றுடன் ஆவணங்களை அனுப்பி விலைமணு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் உங்களால் வழங்கியுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மின்சார பொறியியலாளர் ஒருவரினதும் பரிந்துரையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வைத்தியசாலையின் பராமரிப்பு பிரிவில் கடமைப்புரிந்த இரண்டு பராமரிப்பு தொழிலாளர்கள் மற்றும் ஒரு மின் தொழில்நுட்பர் 2021 ஆண்டின் போது அப் பிரிவிலிருந்து வேறு இடங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த காரணத்தால் வைத்தியசாலையின் பூச்சு | 2023 மே 08 ஆம் திகதி பராமரிப்பு பிரிவை மீண்டும் அமைத்துள்ளதாக மற்றும் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் வைத்தியசாலையில் அனைத்து சிறிய பராமரிப்பு வேலைகள் மற்றும் பூச்சு | மனித வளத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| பூசுவதற்கு மற்றும் எனைய சிறிய பராமரிப்பு வேலைகளை வெளி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க நேரிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வைத்தியசாலையின் மனிதவளத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி குறைந்த கிரயத்தில் செய்ய முடியுமாக இருந்த வேலைகளை வெளித் தரப்பினரிற்கு வழங்கியதால் வைத்தியசாலையிற்கு நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பூசுதல் போன்ற பணிகள் அப் பிரிவினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக |